

பாமாலை 441 பாவி, உன் மீட்பர் கரிசனையாய்

1 பாவி, உன் மீட்பர் கரிசனையாய்

அழைக்கிறார்! அழைக்கிறார்!

அலைந்து திரிந்து ஏன் கெடுவாய்?

இயேசுவின் இரட்சிப்பைப் பார்

பல்லவி

அழைக்கிறார்! அழைக்கிறார்!

விரும்பி வருந்தி உந்தனை அழைக்கிறார்!

2 இளைத்தும் தவித்தும் போன உன்னை

அழைக்கிறார்! அழைக்கிறார்!

நம்பிக்கையோடவர் சரணத்தை ச்

சேருவாய், தள்ள மாட்டார்

3 தாமதமின்றி இந்நேரத்தினில்

வந்திடுவாய், வந்திடுவாய்!

பாவமுமற உன் நெஞ்சத்தினில்

பேர் வாழ்வும் பெற்றிடுவாய்

4 விரும்பி வருந்தி அழைக்கிறார்

ஓடியே வா! ஓடியே வா!

வந்திடுவோரைச் சந்தோஷிப்பிப்பார்!

உடனே வேகமாய் வா